# வெளிநாடு செல்பவர்களின் சாதகங்களில் சனி கோளின் நிலை

சி.செல்வராஜ் *1, முனைவர் ஆ.கலைவாணி 2

*[1]ஆய்வாளர், [2]உதவிப்பேராசிரியர்*

*[1,2] ஜோதிடவியல் துறை, VISTAS பல்லாவரம், சென்னை - 600 117.*

**ஆய்வுச் சுருக்கம்** — வெளிநாடு சென்று பணியில் அமர்ந்து அங்கேயே வாழ்ந்து வருபவர்களுக்கு அவர்களுடைய சாதகங்களில் உள்ள கிரகங்கள் எவ்வாறு உதவி புரிகின்றன என்பதை இங்கு விவரித்துள்ளோம்.

**திறவுச்சொற்கள்** — ஜோதிடம்; கோள்கள்; சாதகம்; பஞ்சபூதங்கள்; சனி.

## 1. முன்னுரை

இன்றைய சூழ்நிலையில் வாலிப வயதை அடைந்த ஆண்களும், பெண்களும் நன்றாக பட்டப்படிப்பை நம் நாட்டிலேயே முடித்து விட்டு வெளிநாட்டிற்கு சென்று பட்ட மேற்படிப்பை படிக்க மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளனர்.

அவ்வாறு மேற்படிப்பை வெளிநாட்டில் படிக்கும் காலத்தில் அங்கேயே பகுதிநேர வேலையாக பல இடங்களில் வேலை செய்து தங்களது அன்றாட தேவைக்காகவும், படிப்புக்காகவும் சம்பாதிக்கின்றனர். அவர்களுடைய பெற்றோர்களுக்கு மிகுந்த சுமையாக இருந்து விடக்கூடாது என்று, அவர்களே கிடைத்த வேலையில் சேர்ந்து கடினமான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். பட்டபடிப்பு முடிவுற்றதும் அந்த நாட்டிலேயே நிரந்தரமாக ஒரு வேலையில் சேர்ந்தும் விடுகின்றனர்.

இத்தகைய சாதகர்களுக்கு ‘சனி பகவான்” எவ்வாறு துணை நிற்கிறார் என்பதை இங்கே விளக்கியுள்ளோம்.

## 2. சனி பகவான்

நவகிரகங்களில் நீதிமான் என்று போற்றப்படுபவர். நாம் செய்த நன்மை தீமைக்கு ஏற்ப நல்லதையும் கெட்டதையும் தரும் கிரகம் சனி பகவான் ஆவார்.

### 2.1 சனி பகவானின் பிற பெயர்கள்

நீலன், அந்தகன், மந்தன், முடவன், கரியவன், காரி என்பன.

### 2.2 கோட்சார சனி பகவான்

- ஒரு ராசியை கடக்க 2½ வருடங்கள் ஆகிறது.
- இராசி மண்டலத்தை கடக்க - 30 வருடங்கள் ஆகின்றன.

*இடம்:* அசுத்தமான இடங்கள், அழுக்கு படியும் இடங்கள்.

### 2.3 தொழில்கள்

நிலக்கரி வியாபாரம், ஜெயிலர், தரிசு நிலம் வாங்கல் விற்றல், கடினமான உழைப்பு, குறைவான ஊதியம், அடிமைத் தொழில், கஷ்டமான ஜீவனங்கள், சுரங்கத் தொழில், மூட்டை சுமத்தல், தோட்டி, குப்பை தொழில், செருப்பு தொழில், இரும்பு, எண்ணை, நவதானியம் சம்பந்தமான வியாபாரம்.

### 2.4 காரகத்துவம்

- ஜீவனக் காரகர், தொழில், வேலை
- சனி எந்த பாவத்தில் இருந்தாலும் தாமதப்படுத்துவார். ஒருவரின் வாழ்க்கைத் தரம்



DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131002

உயர்வதற்கும், தாழ்வதற்கும் முக்கிய காரகர் ஆவர்.

- சனி பகவான் நல்லது செய்வோருக்கு நல்லதும், கெடுதல் செய்வோருக்கு கெட்டதும் செய்வார்.
- ஊர் ஊராய் சுற்றுதல், அன்னிய பாஷைகள், பிழைப்பு, சனி கொடுத்த செல்வத்தை அவரால் கூட அழிக்க முடியாது.
- சுக்கிரன், சனி பகவானுடன் கூடி 9-ம் இடத்தில் இருப்பதன் மூலம் ராஜாவுக்கு இஷ்டவனாகவும், கீர்த்தியுள்ளவனாகவும் நல்லொழுக்கம் உள்ளவனாகவும் ஆகிறான்.
- நல்ல புத்திமான்

### 2.5 வெளிநாடு செல்பவர்களின் சாதகங்களில் சனி கோளின் நிலை

1. லக்னம் / லக்ன பாவாதிபதி
2. 6ம் பாவம் / 6ம் பாவாதிபதி
3. 9ம் பாவம் / 9ம் பாவாதிபதி
4. 10ம் பாவம் / 10ம் பாவாதிபதி
5. 12ம் பாவம் / 12ம் பாவாதிபதி

இவர்களுடன் - சனி கோளின் தொடர்பு இருந்தால் வெளிநாடு செல்லும் யோகம்.

### 2.6 உதாரண சாதகம் - 1

பெயர் - ம. நாகேஸ்வரன்
பிறந்த தேதி - 19/07/1996 வெள்ளி
நேரம் - 11:06:00 24 Hrs.
பிறந்த இடம் - சென்னை
ஜென்ம லக்னம் - கன்னி
ஜென்ம ராசி - சிம்மம்
ஜென்ம நட்சத்திரம் - மகம் - 4 (கேது)
லக்ன புள்ளி - அஸ்தம் - 3 (சந்திரன்)

<table>
<tr><td>சனி<br>கேது</td><td></td><td>சுக்</td><td>செவ்</td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">ராசி</td><td>சூரி<br>புதன்</td></tr>
<tr><td></td><td>சந்தி<br>மா</td></tr>
<tr><td>குரு</td><td></td><td></td><td>ல<br>ராகு</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td></td><td>ல<br>ராகு<br>மா</td></tr>
<tr><td>மா</td><td colspan="2" rowspan="2">நவாம்சம்</td><td>சூரி<br>சந்<br>சுக்</td></tr>
<tr><td></td><td></td></tr>
<tr><td>கேது</td><td>சனி</td><td>செவ்<br>புதன்</td><td>குரு</td></tr>
</table>

சாதக கோள், நட்சத்திர, பாகை விவரம்

| வ.எண் | கோள் | பாகை | நட்சத்திரம் | பாதம் |
|---|---|---|---|---|
| 1. | லக்னம் | $167^{0}. 37^{1}$ | அஸ்தம் | 3 |
| 2. | சூரியன் | $93^{0}. 01^{1}$ | புணர்பூசம் | 4 |
| 3. | சந்திரன் | $131^{0}. 48^{1}$ | மகம் | 4 |
| 4. | செவ்வாய் | $61^{0}. 46^{1}$ | மிருகசீரிடம் | 3 |
| 5. | புதன் (C) | $101^{0}. 56^{1}$ | பூசம் | 3 |
| 6. | குரு (R) | $257^{0}. 06^{1}$ | பூராடம் | 2 |
| 7. | சுக்கிரன் | $52^{0}. 50^{1}$ | ரோகிணி | 4 |
| 8. | சனி (R) | $343^{0}. 35^{1}$ | உத்திரட்டாதி | 4 |
| 9. | ராகு | $168^{0}. 01^{1}$ | அஸ்தம் | 3 |
| 10. | கேது | $348^{0}. 01^{1}$ | ரேவதி | 1 |

சாதகரின் வயது

As on - 2025 - 12 - 31
DOB - 1996 - 07 - 19

26 - 05 - 12

### 2.7 தசா புக்தி

- சூரியன் தசை - 08/05/2017 – 08/05/2023 - 6 years
- சந்திரன் தசை - 08/05/2023 – 08/05/2033 - 10 months


DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131002

- சூரியன் தசையில் குரு புக்தி – 25/05/2019 – 12/03/2020 - 9 mon18 day

**2.8 விதிகள் படி**

1. லக்னம் / லக்னாதிபதி: லக்னம் - கன்னி
   சனி 7-ம் பார்வை லக்ன தொடர்பு
   சனி - லக்னம் தொடர்பு
   லக்னாதிபதி - புதன் - பூசம்-3 நட்சத்திரம் - சனி சாரம் பெற்று உள்ளார்
   சனி - லக்னாதிபதி தொடர்பு
2. 6-ம் பாவம் - கும்பம்
   6-ம் பாவாதிபதி - சனி - உத்திரட்டாதி-4 - சனி சாரம் பெற்று உள்ளார்
   சனி 6-ம் பாவாதிபதி தொடர்பு
3. 9-ம் பாவம் - ரிஷபம்
   மீனம் சனி 3-ம் பார்வை 9ம் பாவத்தை பார்க்கிறார்
   சனி - 9-ம் பாவ தொடர்பு
   சனி 3-ம் பார்வை - சுக்கிரனை பார்க்கிறார்
   சனி - 9-ம் பாவாதிபதி தொடர்பு
4. 10-ம் பாவம் - மிதுனம்
   10-ம் பாவாதிபதி - புதன் - பூசம்-3 - சனி சாரம் பெற்று உள்ளார்
   சனி - 10-ம் பாவாதிபதி தொடர்பு
   மீனம் சனி - கேதுவுடன் -
   கேது - ரேவதி நட்சத்திரம் - புதன் சாரம் பெற்று உள்ளார்
   சனி - 10-ம் பாவாதிபதி தொடர்பு
5. 12-ம் பாவம் - சிம்மம்
   12-ம் பாவாதிபதி - சூரியன் - புனர்பூசம்-4 -
   குரு நட்சத்திர சாரம் பெற்று உள்ளார்.
   சனி 10-ம் பார்வை - குருவை பார்க்கிறார்.
   சனி - 12-ம் பாவாதிபதி தொடர்பு

**2.9 மேற்கண்ட விதிகளின் படி**

சாதகர் சூரியன் தசையில் குரு புக்தியில் செப்டம்பர் 2019-ஆம் ஆண்டு ஜெர்மனி சென்று வேலையில் சேர்ந்து வாழ்ந்து வருகிறார்.

**2.9 உதாரண சாதகம் - 2**

பெயர் - R. ராம் பிரசாத்
பிறந்த தேதி - 05/12/1980 வெள்ளி
நேரம் - 18:40:00 24 Hrs.
பிறந்த இடம் - போடிநாயக்கனூர்
ஜென்ம லக்னம் - மிதுனம்
ஜென்ம ராசி - துலாம்
ஜென்ம நட்சத்திரம் - விசாகம் - 3 (குரு)
லக்ன புள்ளி - மிருகசீரீடம் - 3 (செவ்)

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | **ராசி** | | ராகு |
| கேது | | | |
| செவ் | சூரி புதன் | சந்தி சுக் | குரு சனி மா |

| | | | |
|---|---|---|---|
| மா | குரு சுக் | சனி | சந்தி |
| | **நவாம்சம்** | | கேது |
| ராகு | | | புதன் |
| சூரி | | ல | செவ் |


DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131002

International Journal of Linguistics and Computational Applications (IJLCA) ISSN 2394-6385(Print)
Volume 13, Issue 1, January – March 2026 ISSN 2394-6393(Online)

சாதக கோள், நட்சத்திர, பாகை விவரம்

| வ.எண் | கோள் | பாகை | நட்சத்திரம் | பாதம் |
|---|---|---|---|---|
| 1. | லக்னம் | $60^0.36^1$ | மிருகசீரிடம் | 3 |
| 2. | சூரியன் | $229^0.59^1$ | கேட்டை | 1 |
| 3. | சந்திரன் | $206^0.55^1$ | விசாகம் | 3 |
| 4. | செவ்வாய் | $256^0.42^1$ | பூராடம் | 2 |
| 5. | புதன் (C) | $216^0.00^1$ | அனுசம் | 1 |
| 6. | குரு | $163^0.05^1$ | அஸ்தம் | 1 |
| 7. | சுக்கிரன் | $200^0.36^1$ | விசாகம் | 1 |
| 8. | சனி | $164^0.30^1$ | அஸ்தம் | 2 |
| 9. | ராகு | $110^0.19^1$ | ஆயில்யம் | 2 |
| 10. | கேது | $290^0.19^1$ | திருவோணம் | 4 |

சாதகரின் வயது

As on - 2025 - 12 - 31

DOB - 1980 - 12 - 05

45 - 00 - 26

**2.10 தசா புக்தி**

- புதன் தசை – 13/08/2007 – 12/08/2024 - 17 years
- கேது தசை – 12/08/2024 – 13/08/2031 - 7 years
- புதன் தசை கேது புக்தி – 19/09/2012 – 16/09/2016 - 11 months 27 days

**2.11 விதிகள் படி**

1. லக்னம் - மிதுனம்

கன்னி - சனி 10-ம் பார்வை - லக்னத்தை பார்க்கிறார்

சனி - லக்னம் தொடர்பு

சனி 3-ம் பார்வை விருச்சிக புதனை பார்க்கிறார்

சனி - லக்னாதிபதி புதன் தொடர்பு

2. 6-ம் பாவம் - விருச்சிகம்

சனி 3-ம் பார்வை - 6ம் பாவத்தை பார்க்கிறார்

சனி 6-ம் பாவம் தொடர்பு

3. 9-ம் பாவம் - கும்பம்

9-ம் பாவாதிபதி - சனி

சனி 3-ம் பார்வை - புதனை பார்க்கிறார்

சனி 10-ம் பார்வை - லக்னத்தைப் பார்க்கிறார்

சனி - லக்ன தொடர்பு

4. 10-ம் பாவம் - மீனம்

கன்னி - சனி 7-ம் பார்வை 10-ம் பாவத்தை மீனத்தை பார்க்கிறார்

சனி - 10-ம் பாவ தொடர்பு

சனி - 10-ம் பாவாதிபதி குருவுடன் கன்னியில் இணைவு

சனி - 10-ம் பாவாதிபதி தொடர்பு

5. 12-ம் பாவம் - ரிஷபம்

12ம் பாவதிபதி - சுக்கிரன் - விசாகம்-1 குரு சாரம் பெற்று இருக்கிறார்

கன்னியில் - குருவும் சனியும் இணைந்துள்ளார்

சனி - 12ம் பாவாதிபதி தொடர்பு

**2.11 முடிவு**

சாதகர் மேற்கண்ட விதிகளின்படி புதன் தசை சுக்கிரன் புக்தி சனி அந்தரத்தில் நவம்பர் 2012-ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று பணியில் அமர்ந்து அங்கேயே வாழ்ந்து வருகிறார்.

## 3. முடிவுரை

நன்மை செய்பவருக்கு நல்லதும், கெடுதல் செய்பவருக்கு கெட்டதும் செய்யும் குணம் கொண்ட சனி பகவான் சாதகரின் ஜனன கால சாதகத்தில் லக்னம், 6-ம் பாவம், 9-ம் பாவம், 10-ம் பாவம் மற்றும் 12-ம் பாவம் மேலும் அதன் பாவாதிபதிகளை தொடர்பு கொள்ளும் போது சாதகர் கண்டிப்பாக வெளிநாடு சென்று வேலையில் சேர்ந்து அங்கேயே வாழ்வார் என்பது உறுதி.

**பார்வை நூல்கள்**

[1] டாக்டர் K.N.சரஸ்வதி, கடலங்குடியின் பராச்சர ஸம்ஹிதை, எம்.ஏ.ஜெய்ஷங்கர், கடலங்குடி பப்ளிகேஷன்ஜ், 38, நடேச அய்யர் தெரு, தி.நகர், ஆகஸ்டு 2012

[2] Dr.K.ஜோதிமணி, Dr.A.கலைவாணி, Dr.கு.ஆ.வேலு, ஜோதிட வரலாறும் அடிப்படைக் கோட்பாடுகளும், VISTAS, Pallavaram, Chennai-600117, 2024



DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131002

[3] செ.தேவசேனாதிபதி, வேதலிங்கப் பட்டர் இயற்றிய சாதக பாரிஜாதம் மூலமும் உரையும் ஜோதிடர்களுக்கான கருவூலம், வி.கரு.இராமநாதன், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், புதிய எண்: 10, கெனால் பாங்க் ரோடு, தெற்கு உஸ்மான் ரோடு வழி கிழக்கு சிஐடி நகர், சென்னை - 600 035, அக்டோபர் 2010

[4] சு.எ. குமாரஸ்வாமி ஆச்சாரியார், மந்திரேஸ்வர முனிவர் இயற்றிய பலதீபிகை (தமிழில்), ஸ்ரீ ஆனந்த நிலையம்,29/5, ரங்கநாதன் தெரு, முதல் மாடி, தியாகராய நகர், சென்னை - 600 017, இரண்டாம் பதிப்பு - 2002

[5] சித்தயோகி சிவதாசன் ரவி, உலகியல் ஜோதிடம், சித்தயோகி பப்ளிக்கேஷன்ஸ் பிரைவேட் லிட், பிளாட் எண்: 26, லோட்டஸ் நகர், அசோக் நகர், கோவில் பாதகை, ஆவடி, சென்னை - 600 062, ஜூலை 2010

[6] மகான் பி.எஸ்.ஐயர், மகான் பி.எஸ். ஐயர் அருளிய ஜோதிட அறிவியல் பாகம் – 1, D.சத்திய நாராயணன் நிறுவனர், ஸ்ரீ கௌரி ஜோதிட நிலையம், ஸ்ரீ ராகவேந்திரா சமூக மற்றும் கல்வி அறக்கட்டளை, மதுரை - 625 005. ஏப்ரல் 2021

[7] திருப்பூர் ளு. கோபால கிருஷ்ணன் (GK), பிரசன்ன ஜோதிட ஆராச்சியாளர், சக்தி மிக்க தாம்பூல பிரசண்ணம் , G.K. பப்ளிகேஷன், 58, KN பில்டிங், அரிசிக்கடை வீதி, திருப்பூர் – 4, செப்டம்பர் 2016

[8] அல்லூர் வெங்கட்ராமய்யர், V. இராமலிங்கம் மற்றும், H. ஜெய்கிருஷ்ணன் கர்க ஹோரை சாஸ்திரம் , ஸ்ரீ ஆனந்த நிலையம், 7/14, புதூர் முதல் தெரு, அசோக் நகர், சென்னை - 600 083, டிசம்பர் 2018

[9] திரு.அடிகளாசிரியர், வராகர் ஓரா சாஸ்திரம் சரசுவதி மகால் நூலகம், வெளியீட்டு எண்: 131, தஞ்சாவூர், 4-ம் பதிப்பு, 1999

[10] அல்லூர் வெங்கட்ராமய்யர் ஆதரவுடன் ராமலிங்கம் B, சாதக பாரிஜாதம் பாகம் – 1 (வடமொழிநூல் தமிழாக்கம்), ஸ்ரீ ஆனந்த நிலையம் 7/14, புதூர் முதல் தெரு, அசோக் நகர் (இலட்சுமன் சுருதி அருகில்), சென்னை - 600 083, மார்ச் 2025.

[11] ஜோதிட வேந்தர், பிருகு முனிவரின் பிருகு சம்ஹிதா (பாகம் - 2), லக்ன கோச்சார பலன்கள், குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை தியாகராய சாலை, சென்னை-17, முதல் பதிப்பு, ஜனவரி 2018

[12] ஜோதிட பேராசிரியர் பாரம்பரிய ஜோதிடர் கீழவளவு கே.சுப்ரமணியம், லக்ன பாவம் விதியும் விலக்கம், ஸ்ரீ ஆரோ மீரா பிரசுரம், 1, ஏரப்ப கவுண்டர் சந்து, நடு வீதி, தம்மம்பட்டி, சேலம் மாவட்டம் - 636 113, பிப்ரவரி 2010

[13] ரிஷபானந்தர், கிரகங்களும் யோகப் பலன்களும், அனுராகம், 19, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 600 017.



DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131002